**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 288/2025**

**Prosecution witness : அ.சா.1** **Date : 17.09.2025.**

| | |
|---|---|
| **Name : சுப்ரமணியம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து ஆவண எழுத்தராக வேலை செய்கிறேன். எதிரி எனக்கு தெரியும். ஆஜர் எதிரி என் வீட்டில் வேலை செய்து வந்தார். என் வீட்டில் கடந்த 2 வது மாதம் 2025 ம் வருடம் எனது வீட்டில் உள்ள ஸ்டோர் ரூமில் ஒரு பவுன் எடையுள்ள 4 வளையல்ளை ஒரு பர்சில் என் மனைவிவைத்திருந்தார். அதுபோக ஒரு பவுன் எடையுள்ள ஒரு தோடு, பணம் கொஞ்சம் வைத்திருந்ததாகவும் என் மனைவி என்னிடம் சொன்னார். அவருக்கு அச்சமயத்தில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. மருத்துவமனைக்கு சென்றுவந்த நகையை எடுத்துக்கொள்ளலாம் என்று 01.03.2025 ம் வருடம் காலை 11.30 மணிக்கு ஸ்டோர் ரூம் சென்று நகையை தேடியபோது பர்ஸ் மட்டும் இருந்தது. நகையை காணவில்லை.

2. எங்கள் வீட்டில் வசந்தி என்பவர் வேலை செய்து வந்தார். அவர்தான் அடிக்கடி வீட்டிள்ள ஸ்டோர் ரூமுக்கு சென்றுவருவார். அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது புகார் கொடுத்துவிட்டேன். மற்ற அறைகளை தேடியபோது 6 கிராம் எடையுள்ள ஓம் மார்க் போட்ட மோதிரம், பணம் ரூ.40,000 ஐயும் காணவில்லை. புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில்

உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரி தான் என் வீட்டிலிருந்த நகைகளை திருடியவர்.

3. போலீசார் என்னை விசாரித்தனர். பிறகு என்னுடைய மனைவியிடம் கேட்டபோது நான் கொடுத்த ரூ 40,000/- ல் செலவு செய்தது போக ரூ.15,000/- மற்றும் ஒரு தோட்டை மற்றும் பர்ஸ் வைத்திருந்ததாக சொன்னார். சுமார் 10 நாட்கள் கழித்து போலீசார் காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். அதன் பேரில் நான், எனது மனைவி, எனது மகள் மற்றும் உறவினர்களுடன் காவல் நிலையம் சென்றோம், அங்கு எதிரி இருந்தார். எங்கள் வீட்டில் நாங்கள் வைத்திருந்த நகையை எதிரிதான் எடுத்ததாக ஒப்புக்கொண்டார்.

4. காவல் நிலையத்தில் இருந்த வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டோம். எதிரி என் வீட்டில் திருடிய நகைகளை உருக்கி தங்க கட்டியாக மாற்றியதாகவும் மற்ற நகைகளை பேங்கில் வைத்ததாகவும் இன்னும் சில நகைகளை விற்பனை செய்து வங்கி கணக்கில் போட்டு வைத்துள்ளதாகவும் சொன்னார். நீதிமன்றத்தில் நான் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்ற வழக்கு சொத்தை தாக்கல் செய்கிறேன். சுமார் 5 கிராம் எடையுள்ள மீன் டிசைன் மோதிரம் ஒன்று, **சா.பெ. 1** சுமார் 1 கிராம் எடையுள்ள வேல் டிசைன் மோதிரம் ஒன்று, **சா.பெ2** சுமார் 4 கிராம் எடையுள்ள மோதிரம் ஒன்று, **சா.பெ. 3,** சுமார் 2 கிராம் எடையுள்ள ஜோடி தோடு ஜிமிக்கி ஒன்று, **சா.பெ. 4** ஆகும். வெள்ளி பிரேஸ்லெட் ஒன்று, **சா.பெ. 5** ஆகும். சுமார் 15.0740 உருகிய நிலையில் உள்ள தங்ககட்டி **சா.பெ. 6** ஆகும். நான் நகைகடையில் நகை குறித்து ரசீது இரண்டு பக்கம் **அதசாஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

5. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. யார் சொல்லி எதிரி திருடியதாக தெரிந்துக்கொண்டேன் என்றால் யாரும் சொல்லவில்லை. சந்தேகத்தின்பேரில் தான் சொல்கிறேன் என்றால் ஆமாம். யார் எதிரியை வேலைக்கு வைத்தார்கள் என்றால் நான் தான் வைத்தேன். எதிரியை பற்றி

தெரிந்துக்கொண்டுதான் வேலைக்கு வைத்தேன் என்றால் அக்கா சித்தப்பாவுடன் வேலை செய்கிறார்.யார் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 288/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 17.09.2025.**

| | |
|---|---|
| **Name : ராதாமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். எதிரி எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எங்கள் வீட்டில் தான் வேலை செய்து வந்தார். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தது. அதனால் நான் அணிந்திருந்த சுமார் 1 பவுன் எடையுள்ள 4 வளையல்கள், 1 பவுன் எடையுள்ள தோடு ஒன்று, எனது கணவர் கொஞ்சம் பணம் கொடுத்திருந்தார். அவை அனைத்தையும் நான் எங்கள் வீட்டிலுள்ள ஸ்டோர் ரூமில் வைத்திருந்தேன்.உடல்நிலை சரியான பிறகு அந்த நகைளை எடுத்துபோட்டுக்கொள்வதற்காக ஸ்டோர் ரூம் சென்று பார்த்தபோது நகைகளை காணவில்லை.

2. எங்கள் வீட்டில் வேலை செய்து வந்த ஆஜர் எதிரி அடிக்கடி ஸ்டோர் ரூம் சென்றுவந்ததால் அவர்தான் எடுத்திருப்பார் என்று சந்தேகத்தின் பேரில் என்னுடைய கணவர் அ.சா1 போலீசில் புகார் கொடுத்தார். மேலும் வீட்டில் வைத்திருந்த 6 கிராம் எடையுள்ள ஓம் மார்க் போட்ட மோதிரத்தையும் காணவில்லை.

3. சுமார் 10 நாட்கள் கழித்து காவல் நிலையத்திலிருந்து நகைகள் கிடைத்து விட்டதாகவும், எதிரியை பிடித்து விட்டதாகவும் சொன்னார்கள். அதனால் நான், அ.சா.1, காவல் நிலையம் சென்றோம். எங்கள் முன்னிலையில் போலீசார் விசாரித்தபோது எதிரி நகையை திருடியதாக ஒப்புக்கொண்டார். சில நகைகளை விற்று வங்கியில் பணம் போட்டதாகவும், சில நகைகளை உருக்கி தங்ககட்டியாக மாற்றியதாகவும் சொன்னார்.

4. கிடைத்த நகைகளை நீதிமன்றத்தில் போலீசார் ஒப்படைத்தனர். அதனை நாங்கள் பெற்றுக்கொண்டோம். ஆஜர் எதிரி தான் எங்கள் வீட்டில் திருடியவர். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. யார் சொல்லி எதிரி திருடியதாக தெரிந்துக்கொண்டேன் என்றால் எனது மாமா சொல்லி தெரிந்துக்கொண்டேன். சந்தேகத்தின்பேரில் தான் சொல்கிறேன் என்றால் ஆமாம். யார் எதிரியை வேலைக்கு வைத்தார்கள் என்றால் எனது மாமா தான் வைத்தார். எதிரியை பற்றி தெரிந்துக்கொண்டுதான் வேலைக்கு வைத்தார்கள் என்றால் எனது மாமா விசாரித்து வேலைக்கு வைத்தார். யார் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். சந்தேகத்தின் பேரில்தான் எதிரி மீது சொன்னோம் என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் எதிரியை விசாரித்தபோது ஏதாவது எழுதி வாங்கினார்களா என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 288/2025**

**Prosecution witness : அ.சா.3** **Date : 17.09.2025.**

| | |
|---|---|
| **Name : கீர்த்தனா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மாமனார். எதிரி எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எங்கள் வீட்டில் தான் வேலை செய்து வந்தார். என்னுடைய மாமியாருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார். அதனால் அவர் அணிந்திருந்த சுமார் 1 பவுன் எடையுள்ள 4 வளையல்கள், 1 பவுன் எடையுள்ள தோடு ஒன்று, எனது மாமனார் கொஞ்சம் பணம் கொடுத்திருந்தார். அவை அனைத்தையும் எனது மாமியார் எங்கள் வீட்டிலுள்ள ஸ்டோர் ரூமில் வைத்ததாகவும், பிறகு அந்த நகைளை எடுத்துபோட்டுக்கொள்வதற்காக ஸ்டோர் ரூம் சென்று பார்த்தபோது நகைகளை காணவில்லை என்று சொன்னார்.

2. எங்கள் வீட்டில் வேலை செய்து வந்த ஆஜர் எதிரி அடிக்கடி ஸ்டோர் ரூம் சென்றுவந்ததால் அவர்தான் எடுத்திருப்பார் என்று சந்தேகத்தின் பேரில் என்னுடைய மாமனார் அ.சா1 போலீசில் புகார் கொடுத்தார். மேலும் வீட்டில் வைத்திருந்த 6 கிராம் எடையுள்ள ஓம் மார்க் போட்ட மோதிரத்தையும் காணவில்லை.

3. சுமார் 10 நாட்கள் கழித்து காவல் நிலையத்திலிருந்து நகைகள் கிடைத்து விட்டதாகவும், எதிரியை பிடித்து விட்டதாகவும் சொன்னார்கள். அதனால் நான், அ.சா.1 மற்றும் எனது மாமியார் காவல் நிலையம் சென்றோம். எங்கள் முன்னிலையில் போலீசார் விசாரித்தபோது எதிரி நகையை திருடியதாக ஒப்புக்கொண்டார். சில நகைகளை விற்று வங்கியில் பணம் போட்டதாகவும், சில நகைகளை உருக்கி தங்ககட்டியாக மாற்றியதாகவும் சொன்னார்.

4. கிடைத்த நகைகளை நீதிமன்றத்தில் போலீசார் ஒப்படைத்தனர். அதனை நாங்கள் பெற்றுக்கொண்டோம். ஆஜர் எதிரி தான் எங்கள் வீட்டில் திருடியவர். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. யார் சொல்லி எதிரி திருடியதாக தெரிந்துக்கொண்டேன் என்றால் எனது மாமா சொல்லி தெரிந்துக்கொண்டேன். சந்தேகத்தின்பேரில் தான் சொல்கிறேன் என்றால் ஆமாம். யார் எதிரியை வேலைக்கு வைத்தார்கள் என்றால் எனது மாமா தான் வைத்தார். எதிரியை பற்றி தெரிந்துக்கொண்டுதான் வேலைக்கு வைத்தார்கள் என்றால் எனது மாமா விசாரித்து வேலைக்கு வைத்தார். யார் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். சந்தேகத்தின் பேரில்தான் எதிரி மீது சொன்னோம் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 288/2025**

**Prosecution witness : அ.சா.4** **Date : 17.09.2025.**

| | |
|---|---|
| **Name : செல்வம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து ஜவுளிகடை வைத்து நடத்தி வருகிறேன்.அ.சா.1 எங்கள் வீட்டுக்கு அருகில் குடியிருந்து வருகிறார். ஆஜர் எதிரி அ.சா.1 ன் வீட்டில் வேலை செய்து வந்தார். அ.சா.1 ன் வீட்டில் சுமார் 6 மாதத்திற்கு முன்பு வீட்டில் வைத்திருந்த நகை மற்றும் பணம் காணாமல் போனதாக தகவல் சொன்னார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் சுமார் 5–6 நாட்கள் கழித்து அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து அருகிலுள்ள வீடுகள் மற்றம் இடங்களை குறித்து கொண்டு என்னிடமும், ராமகிருஷ்ணா என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். இதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகசர் அதசாஆ.,3** ஆகும்.

2. காவல் உதவி ஆய்வாளர் அ.சா.1 ன் வீட்டில் திருடியது ஆஜர் எதிரிதான் என்று என்னையும், ராமகிருஷ்ணனையும் அவருடன் வரச்சொன்னார். எங்கள் இருவரரையும் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதால் நாங்கள் இருவரும் சம்மதித்தோம். போலீசார் எதிரியை விசாரித்தபோது அவர் வீட்டில் வைத்திருந்த மோதிரம், பர்சில் வைத்திருந்த பணம், 4 வளையல்கள், ஒரு தோடு ஆகியவற்றை

திருடியதாக ஒப்புக்கொண்டார். அவர் ஒப்புக்கொண்டதை போலீசார் எழுதி எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கனிார்கள். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அதசாஆ,4 ஆகும்.**

**3.** பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி ராஜகோபால் செட்டிதெருவில் அமைந்துள்ள எதிரியின் வீட்டிற்கு அழைத்து சென்று சுமார் 5 கிராம் எடையுள்ள மீன் டிசைன் போட்ட மோதிரம் ஒன்று, 1 கிராம் எடையுள்ள வேல்போட்ட செயின் ஒன்று, மற்றும் 2-3 அயிட்டங்கள் அடங்கிய நகைகளை போலீசாரிடம் அடையாளம் காட்டினார் அதை போலீசார் கைப்பற்றினார்கள். அதிலும் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். மேற்படி கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **(1 முதல் 6 வரை அடங்கிய நகைகள் உள்ள கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து அதசாஆ.5 ஆகும்.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4. நான் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். 3 கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதபட்டது என்ற விபரம்எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் சொன்னத்தின் பேரில் தான் கையொப்பம் செய்தேன். கைபற்றுதல் மகஜரில் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தோன் என்றால் வீட்டில் வைத்து கையொப்பம் செய்தேன்.

மறுவிாசரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 288/2025**

**Prosecution witness : அ.சா.5** **Date : 17.09.2025.**

| | |
|---|---|
| **Name : ராமகிருஸ்னன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து பவர் லும் தறி வேலை செய்கிறேன். அ.சா.1 எங்கள் வீட்டுக்கு அருகில் குடியிருந்து வருகிறார். ஆஜர் எதிரி அ.சா.1 ன் வீட்டில் வேலை செய்து வந்தார். அ.சா.1 ன் வீட்டில் சுமார் 6 மாதத்திற்கு முன்பு வீட்டில் வைத்திருந்த நகை மற்றும் பணம் காணாமல் போனதாக தகவல் சொன்னார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் சுமார் 10–12 நாட்கள் கழித்து அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வைவிட்டு கையெழுத்து வாங்கினார்கள். இதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டடப்படும் பார்வை மகஜரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகசர் உள்ள 2 வது கையொபபம் மட்டும் அதசாஆ.5** ஆகும்.

2. காவல் உதவி ஆய்வாளர் அ.சா.1 ன் வீட்டில் திருடியது ஆஜர் எதிரிதான் என்று என்னையும், செல்வம் அவருடன் வரச்சொன்னார். எங்கள் இருவரரையும் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதால் நாங்கள் இருவரும் சம்மதித்தோம். போலீசார் எதிரியை விசாரித்தபோது அவர் வீட்டில் வைத்திருந்த மோதிரம், பர்சில் வைத்திருந்த பணம், 4 வளையல்கள், ஒரு தோடு ஆகியவற்றை திருடியதாக ஒப்புக்கொண்டார். அவர் ஒப்புக்கொண்டதை போலீசார் எழுதி

எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கனிார்கள். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்து மட்டும் அதசாஆ,6 ஆகும்.**

**3.** பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி ராஜகோபால் செட்டிதெருவில் அமைந்துள்ள எதிரியின் வீட்டிற்கு அழைத்து சென்று சுமார் 5 கிராம் எடையுள்ள மீன் டிசைன் போட்ட மோதிரம் ஒன்று, 1 கிராம் எடையுள்ள வேல்போட்ட செயின் ஒன்று, மற்றும் 2-3 அயிட்டங்கள் அடங்கிய நகைகளை போலீசாரிடம் அடையாளம் காட்டினார் அதை போலீசார் கைப்பற்றினார்கள். அதிலும் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். மேற்படி கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 22.03.2025ம் தேதிய 15.30 மணிக்கு தயார் செய்த மகஜரில் உள்ள 2வது கையொபப்பம் **அ.தாச ஆ 7** ஆகும் போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

4. நான் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். 3 கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதபட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். படித்து காட்டினார்கள். என்னபடித்து காண்பித்தார்கள் என்பது சொல்லமுடியுமா என்றால் தற்போது சொல்லமுடியாது. கைபற்றுதல் மஜரில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் போலிசார் சொன்னத்தின் பேரில் தான் கையொப்பம் செய்தேன். மற்ற வழக்கு விபரம் எனக்கு தெரியாது என்றால் பொருட்கள் காணாமல் போனது மற்றும் கைபற்றியது தெரியும். மேற்சொன்ன விபரம் அ.சா1 சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**